**TA5118**

**விளையாட்டு : 1 சாலை விதிமுறைகள்.**
மாணவர்களை வட்டமாக நிற்க வைத்து ஆசிரியர் சிகப்பு, மஞ்சள், பச்சை ஆகிய மூன்று வண்ணங்களைச் சுழற்சி முறையில் கூற வேண்டும். மாணவர்கள் வட்டத்தில் நடந்து கொண்டிருப்பர். ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் கீழ்க்காணும்
சிகப்பு - நில்
மஞ்சள் - கவனி
பச்சை - செல் என்ற விதிமுறைப்படி விளையாட்டைத் தொடர வேண்டும்.
இவ்விளையாட்டின் மூலம் சாலை விதிகள் மட்டுமல்லாமல் உஷாராக இருத்தல் , கவனித்தல் மற்றும் தொடர்புப்படுத்திப் பார்த்தல் ஆகிய திறன்களும் வளரும்.

**விளையாட்டு : 2 உஷார்**
**20** மாணவர்கள் வரை விளையாடலாம்.

அவசரக் கால ஊர்திகளான ஆம்புலன்ஸ் , தீயணைப்பு வண்டி , காவல்துறை வாகனம் (போலீஸ் வேன்) ஆகிய பெயர்களை நான்கு மாணவர்களுக்கு ஒரு வாகனப் பெயர் என்று பெயரிட வேண்டும். ஒரு வாகனத்தின் பெயரை நடத்துநர் சத்தமாகக் கூறினால் அந்த நால்வரும் இடம் மாற வேண்டும். மேலும், வண்டி என்று பொதுப் பெயரைச் சொன்னால் எல்லோரும் கலைந்து இடம் மாற வேண்டும். நடத்துநர் ஓர் இடத்தில் சென்று நின்று விட்டால், இடம் இல்லாதவர் நடத்துநராகி விடுவார்.

**குறிப்பு:** தேவைக்கேற்ப வாகனத்திற்குப் பதிலாகப் பழ வகைகள், காய்கறிகள் மற்றும் தொழில்கள் என்று மாற்றி விளையாட்டைத் தொடரலாம்.